மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 39/2024

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ஜமால்பீவி (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

21.03.2025

பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை –

1. நான் வழக்கின் வாதி ஆவேன். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பெரியாம்பிள்ளை மீது தாக்கல் செய்துள்ளேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு எழுதி கொடுத்த சொத்து எனக்கு பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். வழக்கின் பிராதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்தின் நான்குமால் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வடக்கே நரிக்குடி ரோடு, கிழக்கே தவுடன் சொத்து, தெற்கே ராக்கம்மாள் சொத்து, மேற்கு வேல்முருகன் நிலம் உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 14 செண்ட் ஆகும் அது எனக்கு வேண்டும்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).